# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:10 அக்டோபர் 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 9 ISSUE NO : 10 October 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



# இயேசுவைப் பார்த்தேன்! விடுதலையானேன்!



என் பெயர் மார்கிரேட் மேரி. ஐந்து வருடங்களுக்கு முன் பஸ்ஸில் இருந்து இறங்கும்பொழுது கீழே விழுந்து அடிபட்டதினால் சரீரத்தில் அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். நடக்க முடியாது. கட்டிலில் இருந்து இறங்க நினைத்தால் பல அடி தூரம் போய் நான் விழுகிற மாதிரி இருக்கும். ஆனால் விழமாட்டேன். முழங்கால் வலி இருந்தது. மயக்கம் வரும். கழுத்து நார்மலாக இல்லாமல் ஒரு பக்கமாக திரும்பி இருப்பது போல இருக்கும். சளி பிரச்சனை இப்படி என் உடலில் பல பிரச்சனைகளினால் நான் மிகுந்த பாடு களை அனுபவித்தேன். அதனால் மனதளவிலும் பாதிக்கப்பட்டு **Depression** ஆன நிலைக்கு வந்துவிட்டேன். அதனால் ஒவ்வொரு நோய்க்கு ஒவ்வொரு மருத்துவரை பார்த்து நான்கு விதமான மருந்துகளை சாப்பிட்டு தான் வாழ்ந்து வந்தேன்.

**2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு என் மகள் என்னை அழைத்து வந்தாள். கூட்டத்திற்கு வருவதற்கு முதல் நாள் இரவு நான் அதிக கண்ணீரோடு அழுது ஜெபித்தேன். கூட்டத்திற்கு வந்து அமர்ந்த உடன் என் மனதிற்குள் ஒரு சமாதானம் வந்தது. சரியான இடத்திற்கு நான் வந்திருக்கிறேன் என்ற ஒரு மனநிறைவு அப்பொழுது எனக்கு ஏற்பட்டது.**

தேவ செய்தி முடிந்து ஜெபநேரத்தில் Dr. ஜேன் ஜாஷ்வா அவர்கள் மன அழுத்தம் மற்றும் **Stress** பிரச்சனையினால் பாதிக்கப்பட்டவர்களை முன்பாக வரும்படி அழைத்தார்கள். அப்பொழுது அநேகர் முன்பாக வந்தார்கள். அவர்களுக்காக சகோதரி ஜெபித்துவிட்டு இறுதியில் தீர்க்கதரிசனமாக, **"இந்த கூட்டத்திற்கு வந்திருக்கிற ஒரு பெண்ணை ஆண்டவர் எனக்கு காட்டுகிறார். ஆண்டவர் காட்டுகிற அந்த சகோதரி தன் கையில் பலவிதமான மருந்து பைகளை கையில் வைத்திருக்கிறீர்கள். மிகுந்த வேதனையில் இருக்கிறீர்கள். இன்று உங்களுக்கு அற்புத விடுதலையை ஆண்டவர் கட்டளையிடுகிறார் என்றார்கள். தொடர்ந்து** Dr. ஜேன் ஜாஷ்வா **அவர்கள் என் தலை மேல் கை வைத்து ஜெபித்தார்கள். ஜெபிக்கும்பொழுது அவர்கள் எனக்கு தெரியவில்லை. மாறாக இந்த அன்பரின் ஜெப ஸ்தல ஆலயம் முழுவதும் நிறைந்து காணப்பட்ட வெண் அங்கி தரித்த இயேசு கிறிஸ்துவை நான் பார்த்தேன் அவருடைய கரம் என்னைத் தொட்டது. நான் மெய்சிலிர்த்து போனேன். அந்த அனுபவத்தின் மூலம் ஆண்டவர் என்னோடு இருக்கிறார் என்பதை உணர்ந்தேன். அந்த நொடிப்பொழுதே எனக்கிருந்த அனைத்து பெலவீனமும் மாறினது.**

வீட்டிற்கு சென்ற நான் என் கையிலிருந்த அனைத்து மாத்திரை பைகளையும் தூக்கி எறிந்துவிட்டேன். **அந்த நாளிலிருந்து இன்று வரை 5 வருடங்களாக நான் எந்த மருந்து மாத்திரைகளையும் எடுக்கவில்லை. நல்ல சுகத்துடன் இருக்கிறேன்.** என்னை நேசிக்கிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்த சகோதரி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

**- திருமதி. மார்கிரேட் மேரி, துறையூர்.**



# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ அக்டோபர் 2023 ◆ இதழ் 10

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

வருடத்தின் கடைசி மாதங்களில் நாம் வந்திருக்கிறோம். நம் தேவாதி தேவன் கர்த்தாதி கர்த்தர் தாமே சகல விதங்களிலும் நம்மை பாதுகாத்து பராமரித்து நடத்தி வருகிறதற்காக அவரை ஸ்தோத்தரிப்போம்.

இந்த வருடத்தின் துவக்கத்திலேயே கர்த்தர் நம்மிடத்தில் சொன்னபடி அநேகர் தேவனுடைய அன்பைவிட்டு விலகிப் போவதையும், உண்மையாய் அவரை தேடுகிறவர்கள் அநேக பாடுகளை சந்திப்பதையும் நாம் பார்க்கிறோம். இது ஒரு பக்கம் நடந்துக்கொண்டிருக்கும் வேளையில் அநேக கிறிஸ்தவர்கள் இதைப்பற்றி சற்றும் அக்கறையற்றவர்களாய் நிர்விசாரணமான வாழ்க்கை வாழ்ந்துக்கொண்டிருக்கின்றனர். வேதம் சொல்கிறதுபோல குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பான கிறிஸ்தவர்களை அவர் வாந்திப்பண்ணிபோடுவார். **உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ குளிருமல்ல அனலுமல்ல. நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்.**

**- வெளி.3:15-16**

**நம்மை போன்ற சகோதர சகோதரிகள் பாடுபடுகிறதை நாம் பார்த்தும் பார்க்காதவர்கள்போல இருக்கக்கூடாது. உலகில் பலவிதங்களில் கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபடுகிற ஒவ்வொருவரையும் நம் ஜெபங்களில் தாங்குவோம். உதவுவோம். குறிப்பாக நமது தேசத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாய் சந்தோஷமாய் சமாதானமாய் வாழ கர்த்தர் கிருபை செய்வாராக!**

இந்த ஆண்டு அநேக புது பாடல்களை வெளியிட இருக்கிறோம். அதற்காக ஜெபியுங்கள். குறிப்பாக அதற்குரிய தேவைகளை உங்கள் குடும்பத்தின் சார்பாக, கம்பெனியின் சார்பாக ஸ்பான்சர் செய்யலாம்.

**கடந்த மாதம் நடைபெற்ற கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். பயணங்களில்**

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

**24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627**

**காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638**

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

பாதுகாப்பைத் தந்தார். அக்டோபர் மாதம் சென்னை, நாகர்கோவில், திருநெல்வேலி, ஹைதராபாத் மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கும் கூட்டங்களுக்காக, அப்போஸ்தல வல்லமை முகாமிற்காக ஊக்கமாய் ஜெபியுங்கள். உங்கள் பகுதியில் நடைபெறுகிற கூட்டங்களில் நீங்கள் கலந்துக் கொள்ளுங்கள். அந்த கூட்டங்களுக்குரிய தேவைகளையும் நீங்கள் ஸ்பான்சர் செய்யலாம்.

எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் எங்கள் அனைவருக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். உங்களுக்காக நாங்களும் ஜெபிக்கிறோம்.

**இம்மாத**
**வாக்குத்தத்த வசனங்கள்**
**எண்ணாகமம் 10:35, உபாகமம் 14:2**
**மத்தேயு 10:31-32, எபேசியர் 5:16-17**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**





அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 முதல் 9.00 வரை

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

புதன், வியாழன், வெள்ளி,
இரவு 7.00 முதல் 7.30 வரை

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST TV கேரளம்

சனி
இரவு 7.30 முதல் 8.00 வரை



# தேற்றரவாளன்

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

**என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது சங்கீதம் 94 : 19**

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான சகோதர, சகோதரிகளே!

மகத்துவமும் வல்லமையும் நிறைந்த நம் கர்த்தருடைய நாமத்தில் உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். ஒவ்வொரு நாளும் எங்கள் தனி ஜெபங்களில் உங்கள் அனைவருடைய சுகத்திற்காகவும், உங்களுடைய ஆசீர்வாதத்திற்காகவும், உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் நல்ல எதிர்காலத்திற்காகவும் மற்றும் சகலவிதமான ஆவிக்குரிய கிருபைகளால் நீங்கள் நிரப்பப்படவும் மன்றாடி ஜெபிக்கிறோம்.

பல சமயங்களில் இரவு நேரங்களில் நான் தூங்கவே மாட்டேன். விடிய விடிய ஜெபித்துக் கொண்டிருப்பேன். அநேக சமயங்களில் இரவு 12 மணிக்கு ஜெபத்தை ஆரம்பித்து காலை 6 மணிக்கு முடிப்பேன். அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா அவருடைய மிகுந்த இரக்கங்களின்படி ஜெபத்தை கேட்டு வெளிப்படையான அற்புதங்களையும், அதிசயங்களையும், இரட்சிப்பையும், சமாதானத்தையும் உங்களுக்கு அருளுவார்.

- **நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.**
- **நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்**

**- மத்தேயு 6 : 6,17,18**

ஒவ்வொரு தேவ மனுஷருடைய வாழ்க்கையிலும் தனி ஜெபம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் நாம் தேவ சமூகத்தில் காத்திருக்கும் பொழுது, நம் பாரங்கள் நீங்கி மிகுந்த சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்கிறோம். விசேஷமாக எல்லோரும் தூங்கும் வேளையில் **லூக்கா 21:36-ன்படி** நாம் விழித்திருந்து அவர் சமூகத்தில் நமது பலவீனங்களை கூட பொருட்படுத்தாமல் பல மணி நேரம் காத்திருக்கும் பொழுது உன்னதமான தேவன் தமது குமாரனாகிய இயேசுவின் மூலம் நமக்கு காட்சி தந்து நம்மை ஆறுதல் படுத்துவார். தேவன் நம்மை எப்படி ஆறுதல் படுத்துகிறார் என்று நான் பல செய்திகளில் எழுதியிருக்கிறேன். ஜெபம் என்பது நாம் மாத்திரம் பிதாவினிடத்தில் பேசுவது அல்ல. அவர் நம்முடைய தாழ்மை, உடைந்த உள்ளத்தை பார்த்து தவறாமல் அவரும் நம்மோடு பேசுகிறார், காட்சியளிக்கிறார். **நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் - சங்கீதம் 23:4.** இதற்காகத் தான் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகில் வாழ்ந்த பொழுது அடிக்கடி பிதாவை நோக்கி மிகுந்த ஊக்கமாய் ஜெபித்தார். சில சமயங்களில் கண்ணீரோடும், பலத்த சத்தத்தோடும் ஜெபித்தார். **(எபிரெயர் 5:7; மாற்கு 6:46 1:35; லூக்கா 5:16)** இந்த கடைசி காலங்களில் எங்கு பார்த்தாலும் எதிர்பாராத கஷ்டங்களும், சங்கடங்களும் நம்மை சூழ்ந்திருந்தாலும் நாம் வேத வசனமாகிய சுடரொளி பட்டயத்தை கையில் ஏந்தி அபிஷேக எண்ணெயால் நிரப்பப்பட்டு அவரோடு செலவழிக்கும் நேரம் தான் ஆனந்தமானது. **ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர், உம்முடைய சமூகத்தில்**

**பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு**

**- சங்கீதம் 16 :11**

**மிகுந்த அன்போடும், பாசத்தோடும் கர்த்தர் எனக்குத் தந்த இந்த மாபெரும் ஊழியத்திற்காக ஜெபிக்கிற, கொடுக்கிற உங்கள் அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். சோர்ந்து போகாமல் கர்த்தருடைய சுவிசேஷ ராஜ்யத்தை எழும்பி கட்டுவோம்.**

**முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும் - ரோமர் 2 : 10**

**நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம் - கலாத்தியர் 6 : 9**

**ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிரா தென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.**

**- 1 கொரி.15: 58**

எனக்கன்பான சகோதர, சகோதரிகளே! இந்த மாதம் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஆவியானவர் மூலம் எனக்கு தந்த வசனத்தின் அடிப்படையில் இந்த மாத செய்தியை உங்களுக்கு எழுதுகிறேன். **நம் உள்ளத்தில் விசாரங்கள் எழும்பும்பொழுது அன்புள்ள தேவன் தரும் ஆறுதல் நம்மை தேற்றுகிறது.** அக்கிரமம், அநீதி நிறைந்த உலகத்தில் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட மக்களை நாம் பார்க்கும்பொழுது நம் இதயம் எல்லாம் வெடிப்பது போல காணப்படும். சுமார் 82 நாடுகள் கிறிஸ்தவர்களை அழிப்பதில் தீவிரமாய் இருக்கிறார்கள். அவர்கள் பகிரங்கமாய் இதை கூறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் பழிக்குப்பழி வாங்க மாட்டார்கள். அவர்கள் இயேசுவிடம் துன்பப்படுத்து கிறவர்களுக்காக ஜெபிப்பார்கள். ஆகவே, அவர்களை அழிப்பது என்பது மிகவும் எளியது என்று மார்தட்டி சொல்கிறார்கள். அதுவுமல்லாமல், திடீரென்று அகால மரணமும், எதிர்பாராத இழப்புகளும் அல்லது கண்ணுக்கு முன் தோன்றும் மகா துயரமான சம்பவங்களும் தீராத கொடிய வியாதிகளும் நம்மை மீள முடியாத துக்கத்தில் ஆழ்த்துகிறது.

உலகப் பிரகாரமான மக்களை பார்க்கும் பொழுது எல்லாமே பார்க்க நன்றாய் இருப்பார்கள். குறைவில்லாமல் இருப்பது போல தோன்றும். ஆனால் அவர்களோடு நெருங்கி பழகும்பொழுது அவர்கள் இல்லங்களுக்கு செல்லும்பொழுது தான் அவர்களுடைய துயரங்கள் நமக்கு தெரிகிறது. எனது வாழ்விலும் கூட நான் எத்தனையோ ஆண்டுகள் தாவீதை போல விசாரங்களில் கழித்தேன். என்னை ஆறுதல்படுத்த இயேசுவை தவிர வேறு ஒருவரும் முன் வரவில்லை. அவர் என் ஜெபத்தை தள்ளாமல் தமது கிருபையை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளாமல் அவ்வப்பொழுது என்னை ஆறுதல்படுத்தி தட்டிக் கொடுத்து முன்னேற்றப்பாதையில் நடத்தினார். என்னை நடத்தின தேவன் உங்களையும் அப்படியே நடத்துவார். வேதம் கூறுகிறது, **இதற்குப்பின்பு நான் சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கொடுமைகளை யெல்லாம் சிந்தித்துப்பார்த்தேன்; இதோ, ஒடுக்கப் பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர் களைத் தேற்றுவாரில்லை; ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலம் இருந்தது, அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை. - பிரசங்கி 4 : 1**

**நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது, நான் மிகவும் வேதனைப்படுகிறேன், எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை, தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன். - சங்கீதம் 69:20.** இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மை படைத்த தேவன் ஒரு தாய் தேற்றுவது போல நம்மை ஆறுதல்படுத்தி தேற்றுகிறார். **ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப் படுவீர்கள் - ஏசாயா 66: 13**

பிரியமானவர்களே! சர்வவல்ல தேவன் எப்படி நம்மை ஆறுதல்படுத்தி தேற்றுகிறார் என்பதை சுருக்கமாக பார்ப்போம்.

## பாவங்களை போக்கி ஆறுதல்படுத்தும் தேவன்

முதலாவது மக்கள் தேவனுக்கு விரோதமாக பாவங்கள் செய்யும்பொழுது தேவனால் தண்டிக்கப் படுகிறார்கள். அதனால் மிகுந்த துக்கம், துயரம், பல வேதனைகள் அவர்களை ஆட்கொள்கிறது. **(சங்கீதம் 31:9,10; 38:1-10) ஆகிலும் நமது அன்பின் சர்வ வல்லதேவன் தமது சொந்த குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தால் (நாம் நமது பாவங்களை அறிக்கையிடும்போது) நமது இதயங்களை பாவமற கழுவி, சுத்திகரித்து நம்மை மன்னித்து மீண்டும்**

**நமது வாழ்க்கையை எல்லாவிதத்திலும் செழிக்கச் செய்து நம்மை தேற்றுகிறார்.**

**பாவத்தின் சம்பளம் மரணம். (ரோமர் 6:23)** துன்மார்க்கனுக்கு சமாதானம் இல்லை என்று வேதம் தெளிவாக கூறுகிறது. **(ஏசாயா 57:21)** தாவீது தான் செய்த பாவங்களின் நிமித்தம் தேவனை நோக்கி கண்ணீர் வடிக்கிறான். **(சங். 25:6; சங்.6:1-7)**

பல சமயங்களில் நம்முடைய முன்னோர்கள் செய்த பாவங்களின் நிமித்தம் தொடர்கிற சாபங்கள் பிற்காலத்தில் அவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் தொடர்ந்து பிடித்து வேதனைப்படுத்துவதை பார்க்கிறோம். தாவீது செய்த பாவத்தின் நிமித்தம் அவனுடைய மூன்று குமாரர்களும் கொலை செய்யப்பட்டார்கள். வேதத்தை நாள் முழுவதும் தியானித்து கர்த்தருக்கு பயந்து ஏராளமான துதி பாடல்களை எழுதின தாவீதிற்கே இந்த நிலை என்றால் சாதாரண மனிதனுக்கு அது எவ்வளவு கொடுமையாக இருக்கும். ஒரு பக்கத்தில் நம் தேவன் நல்லவர் என்றாலும் மறு பக்கத்தில் **"நாள்தோறும் பாவியின் மேல் தேவன் சினங்கொள்ளுகிறவர்"** என்று **சங்கீதம் 7:11** கூறுகிறது. எனினும், சிலுவையில் நமக்காக தம்மை தியாக பலியாக ஒப்புக்கொடுத்து தமது உடலில் இருந்த முழு இரத்தத்தையும் நமக்காக சிந்தின இயேசுவை நோக்கி பார்க்கும்பொழுது சாபங்கள் நம்மைவிட்டு நீங்குகிறது. ஒருவேளை நீங்கள் இளம் வயதில் செய்த பாவங்களால் தண்டனைகளை அனுபவிக்கும்பொழுது சோர்ந்து போகாமல், அவைகள் ஞாபகத்திற்கு வரும்பொழுது இயேசுவிடம் மன்னிப்பு கேளுங்கள். அப்பொழுது அவர் உங்களை மன்னிப்பார். **உபாகமம் 30:8-10; லூக்கா 15:17-22-ன்படி** உங்களை ஆற்றி தேற்றுவார். **இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.** இது எவ்வளவு பெரிய ஆறுதல் அல்லவா?

ஒரு சமயத்தில் ஒரு குடும்பத்தினர் என்னை பார்க்க வந்தார்கள். அவர்கள் குடும்பம் மிகப்பெரிய கூட்டு குடும்பமாகும். அவர்கள் அனைவருமே நன்கு படித்தவர்களாய் இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய சரீரங்கள் வெவ்வேறு விதத்தில் அதிகமாய் பாதிக்கப்பட்டிருந்தது. கேன்ஸர், சிறுநீரகக் கோளாறு, தற்கொலை, வியாபார நஷ்டங்கள், வேலை இல்லாமை இப்படி பலப்பல சாபங்கள் அந்த வீட்டை பற்றி பிடித்திருந்தது. அவர்கள் சத்தமிட்டு அழுதார்கள். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் ஐயா! இல்லையென்றால் நாங்கள் அனைவரும் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்வோம் என்றனர். அப்பொழுது ஒரு நிமிடம் நான் அவர்களை எனது அலுவலகத்தில் உள்ள ஜெப அறையில் உட்கார வைத்துவிட்டு என் ஜெப அறையில் அவர்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்தேன். அவர்கள் பல கோயில்களுக்கு கொடுப்பதிலும், தான தர்மம் செய்வதிலும் எந்த குறையும் வைக்கவில்லை. ஆனாலும் அடி மேல் அடி! **"ஜெப வேளையில் கர்த்தர் என்னோடு பேசினார்"** இவர்களுடைய கொள்ளு தாத்தா மற்றும் அவர்களது முன்னோர்கள் எல்லோருமே பயங்கரமான கோபக்கார ஜமீன்தார்கள். அவர்கள் தாங்கள் மாத்திரம் அந்த ஊரில் ஆட்சி செய்ய வேண்டும் மற்றவர்கள் தங்களுக்கு கீழே இருக்க வேண்டும் என்ற ஆணவத்தில் பலருடைய வாழ்க்கையை கெடுத்து ஒன்றுமில்லாமல் ஆக்கியிருக்கின்றனர். அநேகரை சித்திரவதை செய்து கொன்று போட்டனர். அவர்கள் காலம் முடிந்தது, இறந்து போனார்கள். அவர்கள் செய்த பாவங்கள் அவர்கள் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் விடாமல் தொடர்ந்து பிடித்தது. துயரமும் கண்ணீருமே அவர்கள் வாழ்க்கையாக இருந்தது. அந்த சமயத்தில்தான் நான் இயேசுவை பற்றி அவர்களுக்கு கூறினேன். அவர்கள் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். நம்மை உண்டாக்கின தேவன் நமக்காக பலியானாரா? என வியந்தனர். கிறிஸ்தவர் அல்லாத அந்த மக்கள் உடனே முழங்கால்படியிட்டார்கள். **இயேசுவே எங்களை மன்னியும் என்று கதறினார்கள், சத்தமிட்டு அழுதார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். கலாத்தியர் 3:13-ன்படி அவர்களை தொடர்ந்த சகல சாபத்திலிருந்து அவர் விடுவித்தார். அவர்கள் குடும்பத்தினர் சுமார் 70 பேர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை அன்பை நமது தனி ஜெபத்தின் மூலமும், கூட்டங்களின் மூலமும் அறிந்துகொண்டு அவரை ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்றி வாழ தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். இன்றைக்கும் அவர்கள் சாபங்கள் நீங்கி செழிப்புடன் இருக்கிறார்கள். நமக்கு கிடைத்த பெரிய சிலாக்கியம் மாசற்ற தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவே நமக்காக கிருபாதார பலியாக மாறினார்.**

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்**

**- 1 யோவான் 1 : 9**

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர் களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

- வெளி. 1:6

## அற்புதங்களைச் செய்து ஆறுதல்படுத்தும் தேவன்

மனதுருக்கமுள்ள தேவன் நம் வாழ்வில் பலத்த அற்புதங்களைச் செய்து நமது கண்ணீரை துடைத்து தேற்றுகிறார்.

- **ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்.**
- **என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்; உமது வல்லமையை உமது அடியானுக்கு அருளி, உமது அடியாளின் குமாரனை இரட்சியும்.**
- **கர்த்தாவே, நீர் எனக்குத் துணைசெய்து என்னைத் தேற்றுகிறதை என்பகைஞர் கண்டு வெட்கப்படும்படிக்கு, எனக்கு அநுகூலமாக ஒரு அடையாளத்தைக் காண்பித்தருளும். சங்கீதம் 86:15-17**

நமக்கு அருமையானவர்களை இழந்து பலவித நிந்தையான பேச்சுக்கு நாம் உள்ளாகும்பொழுது மிகவும் சோர்ந்து போகிறோம். பல சமயங்களில் நம்முடைய வாலிப பிள்ளைகளின் வாழ்வில் சின்ன சின்ன ஏமாற்றங்கள் வரும்பொழுது உடனே சோர்ந்துப்போய் வீட்டிற்குள் முடங்கி கிடப்பதையும் நாம் பார்க்கிறோம்.

யாக்கோபு தனக்கு மிகவும் பிரியமான குமாரனான யோசேப்பை காட்டு மிருகங்கள் அழித்ததாக அவன் சகோதரர்கள் சொன்ன பொய்யை நம்பி வருட கணக்கில் சஞ்சலத்தில் வாழ்நாளை கழித்தான். **(ஆதி. 37:35)** அவருடைய துயரத்தை ஆற்ற அவரது மனைவி மற்றும் பெற்ற பிள்ளைகளால் முடியாமல் போயிற்று. ஆனால் கர்த்தர் யாக்கோபை மறவாது ஆறுதல்படுத்தினார். **13 முதல் 15 வருடங்கள் அழுது கொண்டிருந்த அந்த வயதான யாக்கோபை தேவன் மறந்துவிடவில்லை.தனக்கு மிகவும் பிரியமான யோசேப்பு உயிரோடு இருக்கிறான் என்றும், எகிப்தின் பிரதம மந்திரியாக இருக்கிறான் என்பதையும் கேள்விப்பட்டபொழுது அவனுடைய ஜீவன் அவனுக்குள் திரும்பி வந்தது.அப்பொழுது இஸ்ரவேல்: என் குமாரனாகிய யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே, இது போதும், நான் மரணமடையுமுன்னே போய் அவனைப் பார்ப்பேன் என்றான் - ஆதி. 45: 28**

அன்னாளும் தன் வாழ்க்கையில் இப்படித் தான் விசாரத்துடன் இருந்தாள். அவள் சக்களத்தி பெனின்னாள் பண்டிகைதோறும் அன்னாளுக்கு குழந்தை இல்லாததின் நிமித்தம் விசனப்படுத்தி கொண்டே இருந்தாள். அன்னாள் மனம் கலங்கினாள். **(1சாமு. 1:6-17) கர்த்தர் அன்னாளுடைய கண்ணீரின் ஜெபத்தை கேட்டு அவளுக்கு குழந்தை பாக்கியத்தை கொடுத்தார். ஏளனமாய் நினைக்கப்பட்ட அன்னாளுக்கு மகா பெரிய தீர்க்கதரிசியான சாமுவேல் பிறக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார்.**

நகோமியின் வாழ்க்கையும் இது போலத்தான் இருந்தது. அவள் தன் கணவரையும், இரண்டு குமாரர்களையும் இழந்து தவித்தாள். ரூத் என்னும் மோவாபிய ஸ்தீரி (நகோமியின் மருமகள்) தன் மாமியை தாயை போல நினைத்து அவளை பற்றிக் கொண்டாள். அவர்கள் பெத்லகேம் வந்தபொழுது அந்த ஊரார் இவர்கள் நடந்துபோவதை பார்த்து நகோமி என்று சொன்ன பொழுது சட்டென்று நகோமி அவர்களைப் பார்த்து **"என்னை நகோமி என்று அழைக்காதீர்கள் (நகோமி என்றால் மகிழ்ச்சி என பொருள்) அதற்குப் பதிலாக என்னை மாராள் (கசப்பு) என அழையுங்கள்" என்கிறாள். ஆனால் இரக்கமுள்ள கர்த்தர் அவளை கைவிடவில்லை. நகோமியின் மருமகள் ரூத்தின் வாழ்க்கையை கர்த்தர் ஆசீர்வதித்தார். ரூத்தின் வம்சத்தில் தாவீது பிறந்தான். ஏன் இயேசு கிறிஸ்துவே அந்த சந்ததியில் தோன்றுகிறார். எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் பாருங்கள். அன்னாள் மற்றும் நகோமியை கண்ணோக்கிய தேவன் நிச்சயம் உங்களுக்கும் ஒரு பெரிய அற்புதத்தை செய்து தேற்றுவார்.**

**ஒரு சமயத்தில் ஒரு தம்பதியினர் என் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஆயிரக்கணக் கான மக்கள் மத்தியில் எங்கோ ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்கள். எனக்கு அவர்களை பற்றி ஒன்றும் தெரியாது. கர்த்தர் அவர்களை பெயர் சொல்லி அழைத்து தீர்க்கதரிசனமாய் முன்னுக்கு வரச்சொல்லி அவர்கள் குடும்பத்தின் சூழலை இக்கட்டான நிலையை வெளிப்படுத்தினார். அது என்னவென்றால், அவர்களுக்கு ஒரு ஆண் மகனும், பெண் பிள்ளையும் உள்ளனர். 10ம் வகுப்பு**

படிக்கும் பெண் பிள்ளைக்கு திடிரென்று Muscular Dystrophy என்னும் வியாதி வந்தது. படுத்த படுக்கையானாள், 8ம் வகுப்பு படிக்கும் சிறுவனுக்கு மருந்துகளால் குணமாக்க முடியாத கொடிய வியாதியான கேன்சராலும் துடிதுடித்துக் கொண்டிருந்தான். இந்தியா முழுவதும் எங்கெங்கோ சென்றும் ஒரு பயனுமில்லை. முடிவில் தெலுங்கானா மாநிலம் கரீம் நகரில் நான் தேவ செய்தி கொடுக்கும் பொழுது அவர்களை பற்றி கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் மிகவும் அழுதார்கள். அப்பொழுது ஆவியானவர் என்னிடத்தில் "அவர்களை விசுவாசத்தோடு வீட்டிற்கு போகச் சொல், நான் அவர்களை குணமாக்கிவிட்டேன்" என்றார். என்ன ஆச்சரியம். அவர்கள் வீட்டிற்கு சென்றபொழுது இதயம் வரைக்கும் பாதித்திருந்த Muscular Dystrophy (மரிப்பதற்கு இன்னும் ஒரு வாரம் மாத்திரம் இருந்தது) வியாதி அந்த மகளைவிட்டு நீங்கினது, தானே எழும்பினாள். இயேசு அவர்கள் வீட்டிற்கு வந்ததை பார்த்து தன் தம்பியின் கையை பிடித்து தூக்கிவிட்டாள். இருவரும் அற்புத சுகமாயினர். பெற்றோர்கள் வீட்டிற்கு சென்றபொழுது இந்த ஆச்சரியமான காரியத்தை பார்த்தார்கள். குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாக மாறினார்கள். இன்றும் கூட நீங்களும் உங்கள் கணவரைக் குறித்தோ, பிள்ளைகளைக் குறித்தோ அனுதினமும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கலாம். ஒரு வேளை தீராத வியாதியின் நிமித்தம் சோர்ந்து போய் இருக்கலாம். மனங்கலங்காதீர்கள் இதை படிக்கும்பொழுதே கர்த்தர் இயேசு உங்கள் இல்லத்திற்கு வருவார் உங்களை ஆறுதல்படுத்துவார்.

அன்பு பங்காளர்களே, நீங்கள் ஒரு வேளை உங்கள் பேரக்குழந்தைகள் நிமித்தம் அல்லது வெளிநாட்டில் வேலை செய்யும் உங்கள் பிள்ளையின் நிமித்தம் வெவ்வேறு காரணங்களால் அவர்கள் கஷ்டப்படுவதை பார்த்து அழுது கொண்டிருக்கலாம். சோர்ந்து போகாதீர்கள்! இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவனோடு இருக்கிறார். அவர் நிச்சயம் உங்கள் இல்லத்திற்கு வருவார். சகல சாபங்கள், வியாதிகள், கடன் பிரச்சனைகள், திக்கற்ற நிலையை மாற்றி, ஆறுதல்படுத்தி உயர்ந்த அடைக்கலத்தை தருவார். உங்கள் ஆத்துமாவை தேற்றுவார். காணாமல் போன கணவர் திரும்ப வருவார். வீட்டிற்குள் அடைக்கப்பட்டு பிசாசினால் கஷ்டப்படும் பிள்ளைகள் இயேசுவின் நாமத்தில் விடுதலை அடைவார்கள். இந்த செய்தியில் உங்கள் கரங்களை வைத்து ஜெபியுங்கள்.

## பரிசுத்த ஆவியானவர் தரும் ஆறுதல்

**பரிசுத்த ஆவியானவர் நம்மை எக்காலத்திலும் ஆறுதல்படுத்தி, உற்சாகப்படுத்தி, எழுப்புதலை உண்டாக்கி உயர் ஸ்தலங்களில் நாம் நடக்கத்தக்கதாக நம்மை ஆற்றி தேற்றுவார்.**

இந்த கடைசி காலத்தில் அநேகர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை வாஞ்சையோடு கேட்கிறார்கள். கர்த்தர் நிச்சயமாக அவர்களை தம்முடைய ஆவியால் நிரப்புவார். **(அப்போஸ்தலர் 2:17,18)** கர்த்தர் இயேசு சிலுவையில் அறையப் பட்டதை பார்த்த சீஷர்கள் பயத்தால் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்தார்கள். மிகுந்த சோகத்தில் பயமும், கலக்கமும் அவர்களை சூழ்ந்திருந்தது. ஆனால் இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன் தமது சீஷர்களை நோக்கி, **ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. (யோவான் 16:6) நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன் (யோவான் 14:18)** என்று கூறி **தாம் பரலோகத்திற்கு போன பிறகு பிதாவினிடத்தில் கேட்டு தம்மை விசுவாசித்த அன்பு சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் என்னும் தேற்றரவாளனை நிரந்தரமாக அவர்களோடு இருப்பதற்கு அனுப்பினார். பரிசுத்த ஆவியை பெறுவதற்கு முன்பு பயந்து வாழ்ந்த சீஷர்கள், பரிசுத்த ஆவியைப் பெற்ற பிறகு உலகத்தையே அசைத்தார்கள்.**

ஆம்! அன்பு தேவ பிள்ளைகளே! அபிஷேகத்தை பெற விரும்புகிற நீங்களும் கூட இப்பொழுதே முழங்காலில் நின்று இயேசு கிறிஸ்துவின் சிலுவை தியாகத்தை நினையுங்கள், துதியுங்கள். அப்பொழுது நிச்சயம் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வீர்கள். **(மத்தேயு 7:7-11)** கர்த்தர் உங்களை பிரயோஜனமுள்ள பாத்திரமாக பயன்படுத்துவார்.

அன்பான தேவ ஜனமே! நீங்கள் பலவிதங்களில் உதவி செய்த அல்லது நீங்கள் வளர்த்து ஆளாக்கின பிள்ளைகள் உங்களை மறந்துவிட்டாலும் அல்லது சடுதியான துயரமான செய்திகளை நீங்கள் கேட்டாலும் மனங்கலங்காதீர்கள்! நிச்சயமாய் கர்த்தர் உங்களை ஒருபோதும் மறவாமல் தகப்பன், தாய் அல்லது கணவர், மனைவி, பிள்ளைகளுக்கும் பதிலாக அவரே உங்களுக்கு எல்லாமுமாய் இருப்பார்.

தேற்றரவாளன் என்று சொல்லும் பொழுது (Stand by Advocate, Doctor, Teacher, Counsellor, Provider, Protector, Miracle worker, Sanctifier) வழக்கறிஞர், மருத்துவர், ஆலோசகர், பாதுகாவலர், ஆசிரியராக இருந்து உங்களை மோட்சம் செல்லும் வரைக்கும் சுகத்துடன் காத்து வெற்றி பாதையில் நடத்துவார்.

**சில வருடங்களுக்கு முன் கன்னியாகுமரி யிலிருந்து ஒரு சகோதரி தொலைப்பேசியின் வாயிலாக என்னோடு பேசினாள். அவள் கணவர் இந்தியாவின் இமயமலை பகுதியில் இருக்கும் எல்லை படையில் இராணுவ வீரராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்கு இரு புறங்களிலும் பனிப்பாறைகள் இருந்தது. அதன் இடையில் இருந்த பள்ளத்தாக்கில் ஒரு தொங்கு பாலம் இருந்தது. அங்கு தான் இந்த சகோதரியின் கணவர் மற்றும் 11 பேர் இணைந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள். திடிரென்று உறைந்த ஐஸ் பாறைகள் கரைந்து வெள்ளமாய் வந்து அந்த பாலத்தை உடைத்து அத்தனை பேரையும் உறைந்த ஐஸ் பாறைகளுக்குள் மூழ்கடித்து விட்டது. தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு சுமார் இரண்டு வாரங்களில் 11 பிணங்களை ராணுவத்தினர் மீட்டனர். ஆனால் இந்த சகோதரியின் கணவர் பற்றி 15 நாட்களாகியும் எந்த ஒரு செய்தியும் வரவில்லை. அவரை தேடும் பணியையும் ராணுவ தலைமையகம் கைவிட்டது. ஐஸ் பாறைகளுக்குள் சிக்கி அவர் இறந்து இருப்பார் என்று நினைத்தார்கள். அந்த இளம் மனைவி மிகவும் கண்ணீருடன் அழுது கொண்டே இருந்தாள். முடிவில் என்னை குறித்து கேள்விப்பட்டு இரவு 11 மணிக்கு எனக்கு போன் செய்தாள். அவள் அழுத அழுகைக்கு அளவேயில்லை. நானும் கண்ணீருடன் இயேசுவின் நாமத்தில் பிதாவை நோக்கி மன்றாடினேன். தேவனுடைய ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினபடி அவளை நோக்கி "உன் கணவர் உயிரோடிருக்கிறார், நாளை Military Camp-க்கு வருவார்" என்று கூறினேன். என்ன ஆச்சரியம் அடுத்த நாளே அவளுடைய கணவர் உயிரோடு வந்து அந்த ராணுவத்தினர் முன் நின்றார். எல்லோரும் என்ன ஆனது என வியப்புடன் அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் "ஐஸ் கற்கள் என் மீது விழுந்தது உண்மைதான். ஆகிலும் என் மனைவியும், திருச்சியிலுள்ள ஒரு தேவ ஊழியக்காரர் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களும் எனக்காக ஊக்கமாய் ஜெபிப்பதை கண்டேன். எனக்கு அவரைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால், அவர் கூறிய தீர்க்கதரிசனத்தின்படியே அனைத்தும் நடந்தது. 15 நாட்கள் கழித்து இயேசு வந்தார், பனிப் பாறைகளை நீக்கினார், அந்த 15 நாட்களும் நான் தேவ தூதர்களால் போஷிக்கப் பட்டேன். முடிவில் இயேசு என்னை பார்த்து இப்பொழுது பாறைகளை எல்லாம் சரி செய்து விட்டேன். நீ போ" என்றார். நான் இப்பொழுது உயிரோடு வெளியே வந்துவிட்டேன் என்று கூறினார். இதோ, தேவன் மகத்துவ முள்ளவர், அவர் ஒருவரையும் புறக்கணியார்; மனதுருக்கத்திலும் அவர் மகத்துவமுள்ளவர்**

**-யோபு 36 : 5**

**அந்த சகோதரி அடைந்த சந்தோஷத்தை யாராலும் விவரிக்க முடியாது. இப்படிப்பட்ட அற்புதங்களை இயேசு இன்றும் செய்கிறார். நம் வாழ்வின் முடிவில் நாம் பட்ட எல்லா கஷ்டத்திற்கும் சேர்த்து நமது அன்புள்ள இயேசு நம்மை பரலோகத்திற்கு எடுத்து சென்று வெளி. 7:14-17-ன்படி நிரந்தரமாக தேற்றுவார்.**

**அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.**

**ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக் கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.**

**இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ண மாவது இவர்கள்மேல் படுவதுமில்லை.**

**சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக் குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்**

கர்த்தர் நம்மை தேற்றும் பொழுது நாம் எளியவர்களையும் ஆதரிக்க வேண்டும். அவர் களுக்கும்பல நன்மைகளை செய்து அவர்களை தேற்ற வேண்டும்.

**லூக்கா 16:19-31ல்** ஐசுவரியவான் லாசருவின் கதையை நாம் நன்கு அறிவோம். மிகுந்த ஆஸ்தியுள்ள ஐசுவரியவான் தன்னைப் பற்றியே எண்ணிக்கொண்டு அநித்தியமான உலக வாழ்க்கையை வாழ்ந்து, தான் தினமும் கடந்து போகும் போது கிழிந்த வஸ்திரங்களுடன், நாய்கள் நக்கி தின்னும் பருக்களுடன் வேதனைப்பட்ட ஏழை சகோதரனாகிய லாசருவை எண்ணாமலும்,

உதவாமலும் போனான். முடிவில் ஐசுவரியவான் நித்தியமான பாதாளத்தின் அக்கினியின் வேதனையிலும், லாசருவோ நித்திய பேரின்ப மோட்சத்தில் ஆபிரகாமின் மடியில் நித்தியமாக களிகூர்ந்தான்.

ஆம் எனக்கன்பானவர்களே! எப்போதும் நம்மைப் பற்றியே நாம் நினைத்துக் கொண்டு வாழாமல், நம்மைச்சுற்றி கஷ்டப்படும் அயலகத்தார், கிராமப்புறங்களில் வசதி உள்ளவர்களால் ஏளனமாய் நினைக்கப்படுகிற அன்பு குழந்தைகள், விதவை தாய்மார்களை, தீராத வியாதியினால் பாதிக்கப் பட்டவர்களை நாம் சந்தித்து அவர்களை ஆறுதல்படுத்த வேண்டும். நாம் நமக்கே பிரியமாய் வாழாமல் கண்ணீர் வடிக்கிற மற்றவர்களையும் ஆறுதல்படுத்துவோம். கிறிஸ்து இயேசு நாம் பிறப்பதற்கு முன்பே நம்மை நேசித்து தெரிந்து கொண்டு நம்மை சுகப்படுத்தி, ஆசீர்வதித்து இருக்கிறார். எனவே நாமும் அவருடைய கற்பனைகளின்படி நற்கிரியைகளை செய்யக்கூடிய தேவனுடைய செய்கையாக இருக்க வேண்டும்.

**ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கை யாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் - எபேசியர் 2 : 10**

இந்த கட்டளைக்கு ஏற்ப தான் எளியவர்கள் எல்லோர் மீதும் நாம் அன்பு கூறுகிறோம். நம்மால் முடிந்த அளவிற்கு உதவி செய்கிறோம். கஷ்டப்படுகிற வேதனைப்படுகிற மக்களை நம்முடைய சகோதர, சகோதரிகளாக பாவித்து உதவி செய்ய வேண்டும். இயேசுவின் அன்பை நினைத்து உதவி செய்ய வேண்டும். அப்படி எளியவர்கள் உயர்த்தப்படுவதை பார்க்கும்பொழுது எத்தனை சந்தோஷம், சமாதானம் ஏற்படுகிறது. நான் பாரமாய் இருக்கும் பொழுது சட்டென்று நாம் வளர்க்கிற ஏழை பிள்ளைகளை பார்க்க சென்று விடுவேன். அவர்களை பார்க்கும்பொழுது என்னுடைய கவலை எல்லாம் நீங்கி விடுகிறது. அந்த குழந்தைகள் நன்றாக சாப்பிட்டு, நன்றாக ஆடைகள் அணிந்து, வசதி உள்ளவர்களை போல அவர்களுக்கு தேவையான எல்லாவற்றையும் செய்யும் பொழுது எத்தனை ஆனந்தம். இயேசு **"இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" (மத்தேயு 18 : 5)** என்று கூறியிருக்கிறார். பிரியமானவர்களே, கர்த்தர் தாமே இப்படிப்பட்ட பல நற்காரியங்களை நாம் செய்ய பழகுவித்து, நாம் மற்றவர்களை தேற்றுகிற கருவியாக மாற்றுவாராக! **தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் - நீதி. 28:27a தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்; தரித்திர னுக்குத் தயை செய்கிறவனோ அவரைக் கனம் பண்ணுகிறான் - நீதி. 14: 31.**

**ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் - நீதி. 19: 17 .**

**ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான் - நீதி. 21: 13**

**எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும் படியாக இப்படிச் செய்யவேண்டும்; இன்று நான் உனக்குக் கற்பிக்கிற எல்லாக் கற்பனைகளின் படியும் நீ செய்யும்படி, உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்பாயானால்,**

**உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கும்படி கொடுக்கும் தேசத்தில், உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார்.**

**உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை; நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய், உன்னையோ அவர்கள் ஆளுவ தில்லை. உபா.15:4-6**

**உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்.**

**தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்க தரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக் கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்.**

**சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**- மத். 10 :40 - 42**

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் - மத். 6:33**

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)

Online Donation (Website)

Bank Account / QR Code

UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்



| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930

State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்

10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

**Praise Report**

# துதி அறிக்கை

## வார்த்தையின் வல்லமையால் சுகம் பெற்றேன்!



என் பெயர் பரமேஸ்வரி கிருபா. Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கொடுக்கிற தேவ செய்திகள் அனைத்தும் நான் ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர அதிக உதவியாக இருக்கிறது. அதனால் அவர்கள் கூட்டத்திற்கு தவறாமல் நான் வந்து விடுவேன். சமீபத்தில் பைக் ஓட்டலாம் என நினைத்து அதற்காக பழகினேன். அதனால் ஒரு சில நாளில் கால் வலி, கால் உளைச்சல் ஏற்பட்டு அதிக கஷ்டப்பட்டேன். தொடர்ந்து எலும்பு உடைந்ததைப் போன்று அதிக வலி ஏற்பட்டு துடித்தேன்.

**அந்த நேரத்தில் தபால்காரர் அன்பரின் ஊழிய பத்திரிக்கையை எங்கள் விலாசத்திற்கு வந்து கொடுத்து சென்றார். அதை எடுத்துக்கொண்டு என் கொழுந்தனாரின் மகள் ஓடிவந்து என் காலில் வைத்தாள். அந்த நொடிப்பொழுதில் என்னுடைய கால் வலி நீங்கியது. அந்த பத்தரிக்கையின் அட்டைப்படத்தில் இருந்த வேத வசனம் புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன். சங்கீதம் 92:10. வார்த்தையின் வல்லமையால் சுகம் பெற்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- திருமதி. பரமேஸ்வரி கிருபா, மதுரை.**

## சரீர பெலவீனம் நீங்கியது!



என் பெயர் சித்ரா. என் குடும்பத்தின் காரியங்கள், என் உறவினர்களுடைய காரியங்கள் எதுவாயிருந்தாலும் உடனே அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு ஜெபிப்பேன். அந்த காரியங்கள், பிரச்சனைகள் எல்லாவற்றிலும் இயேசப்பா அற்புதமாக உதவி செய்துள்ளார். சமீபத்தில் என் அக்காவிற்கு பிரஷர், சுகர் அதிகமாகி இக்கட்டான நிலையில் இருந்தார்கள். **அந்த நேரத்தில் அன்பரின் ஊழியத்திற்கு தொடர்புக்கொண்டு ஜெபிக்கும்படி சொன்னேன். ஒரு ஊழியர் பாரத்துடன் ஜெபித்தார்கள். உடனே என் அக்காவின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் உண்டானது. ஜெபத்தை கேட்டு சுகம் கொடுத்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- Sis. சித்ரா, கும்பகோணம்.**

## வாழ்வில் உயர்ந்தேன்



என் பெயர் தேவதாசன். மனைவி பெயர் ஜெயந்தி. திருமணம் ஆன அந்த நாட்களில் குடும்பத்தை நடத்துவதற்கு போதுமான பொருளாதாரம் இல்லாமல் அதிக கஷ்டங்களோடு வாழ்ந்து வந்தோம். அந்த நாட்களில் கோயம்புத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்தேன். சகோதரர் ஜெபித்துவிட்டு ஒரு ஆலோசனை சொன்னார்கள். நீங்கள் செய்கிற தொழிலுடன் சேர்த்து இன்னொரு வேலையும் பாருங்கள் என சொல்லி அனுப்பினார்கள். அதன்படி நானும் என் தொழிலை செய்துக்கொண்டு கூடுதலாக இன்னொரு கம்பெனியில் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தேன்.

**அதன்பின் எனக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். சொந்த வீடு வாங்க கர்த்தர் உதவி செய்தார். என்னுடைய தொழிலும் தேவ கிருபையால் நன்றாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் என் மூத்த மகளுக்கு திருமணம் முடிந்தது. எங்களை சகல காரியத்திலும் ஆசீர்வதித்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். எனக்காக ஜெபித்து ஆலோசனை கொடுத்த சகோதரர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.** **- சகோ. தேவதாசன், உடுமலைப்பேட்டை.**

## இரட்டிப்பான நன்மை!

என் பெயர் பென்ஸி. எனக்கு திருமணம் ஆகி 5 வருடங்களாக குழந்தை இல்லை. அதற்காக ஏராளமான மருத்துவமனைகள் சென்று சிகிச்சை எடுத்தோம். எந்த பலனும் இல்லை. முடிவில் IVF பண்ணச்சொல்லி விட்டார்கள். **2018-ம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்தேன். சகோதரர் ஜெபித்துவிட்டு IVF பண்ணாமலேயே தேவன் உங்களுக்கு ஆண் குழந்தையை தருவார். அவனுக்கு ஜோஷ்வா என பெயர் வையுங்கள் என்றார்.**

2019-ம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் வந்திருந்தப்பொழுது உன்னை அதிசயங்களை காணப் பண்ணுவேன் என்ற தேவ செய்தியை கொடுத்தார்கள். நானும் விசுவாசத்துடன் சென்றேன். **அந்த ஆண்டு மார்ச் மாதம் நான் கருத்தரிக்க கர்த்தர் தயை செய்தார். அக்டோபர் மாதம் ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு ஐயா அவர்கள் சொன்னபடியே ஜோஷ்வா என பெயர் வைத்தோம். அதன்பின் கர்த்தர் இன்னொரு ஆண் குழந்தையையும் தந்து எங்களை ஆசீர்வதித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**



**- திருமதி. பென்ஸி, நாகர்கோவில்.**

## பணி மாறுதல் கிடைத்தது!



என் பெயர் கீதாஞ்சலி. சொந்த ஊர் கோயம்புத்தூர். 2012-ல் எனக்கு திருச்சியில் அரசு வேலை கிடைத்தது. அந்த நாட்களில் திருச்சியில் நடைபெறுகிற அனைத்து கூட்டங்களிலும் பங்கு பெறுவேன். **2017-ல் திருச்சியில் பங்காளர் சந்திப்பு கூடுகை நடந்தது. அந்த கூடுகையில் நான் கலந்துக் கொண்டபோது Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக ஜெபித்துவிட்டு சொன்னார்கள் விரைவில் உனக்கு சொந்த ஊருக்கே டிரான்ஸ்பர் கிடைக்கும் என சொல்லி அனுப்பினார்கள். 2018-ல் எனக்கு கோயம்புத்தூருக்கே டிரான்ஸ்பர் கிடைத்து வந்துவிட்டேன். கர்த்தர் செய்த இந்த மகத்தான செயலை நினைத்து கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- திருமதி. கீதாஞ்சலி, கோயம்புத்தூர்.**

## பல வருடம் பிரச்சனை நீங்கியது!



என் பெயர் தேவி. எனக்கு பல வருடங்களாக வாயு பிரச்சனை இருந்து வந்தது. அதற்காக சிகிச்சை எடுத்தேன். மருந்துகளை சாப்பிட்டேன். ஆனால் அந்த பிரச்சனை நீங்கவில்லை. கடந்த ஒரு வருடமாக நாகர்கோவிலில் நடைபெறுகிற அனைத்து கூட்டத்திற்கும் நானும் என் மகளும் தவறாமல் வந்து கலந்துக்கொண்டு ஜெபித்து செல்வோம்.

**கர்த்தர் எனக்கு இரங்கினார். தற்பொழுது எந்த மருந்தும் சாப்பிடாமலே வாயு பிரச்சனை நீங்கி சுகமாய் இருக்கிறேன். எனக்கு இரங்கிய கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- திருமதி. தேவி, கொல்லம்**

## அற்புத சுகம் பெற்றேன்!

என் பெயர் மணிமேகலை. என் தம்பிக்கு இரத்த அழுத்தம் அதிகமாகி பக்கவாதம் ஏற்பட்டு மயக்க நிலைக்கு போய்விட்டார். உடனே வாட்ஸ் அப் வாயிலாக Dr. ஆனந்த ஸ்திரா அவர்களுக்கு தெரிவித்தோம். **சகோதரர் போன் மூலம் என் தம்பிக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். அந்த நிமிடமே என் தம்பி கண் விழித்து எழுந்து உட்கார்ந்தான், பேசினான். அதன்பின் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்தோம். சிகிச்சை முடிந்து தம்பியை அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு அழைத்து வந்தோம். உடனே ஐயா, அம்மா இருவரும் பாரத்துடன் தம்பிக்காக ஜெபித்தார்கள். தற்பொழுது நடப்பதற்கும், ஆசிரியப் பணிக்கு செல்வதற்கும் கர்த்தர் பெலன் தந்திருக்கிறார். படுக்கையில் இல்லாதபடி பாதுகாத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எங்களுக்காக ஜெபிக்கிற ஐயா குடும்பத்தினருக்கு நாங்கள் குடும்பமாக நன்றி சொல்கிறோம்.**



**- திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை.**

## மூளை வளர்ச்சி குறைபாடு நீங்கியது!



என்னுடைய 2-வது மகள் பிறந்ததிலிருந்து தாய்ப்பால் குடிக்கவில்லை. அத்துடன் மூளை வளர்ச்சியும் குறைவாக இருந்தது. மகள் வளர வளர எந்த ஆகாரமும் சரியாக சாப்பிட முடியவில்லை. மகளுக்கு 3-வயது நடக்கும்பொழுது மதுரையில் நடைபெற்ற கூட்டத்திற்கு அழைத்து வந்திருந்தோம். அப்போதும் மகளுக்கு சாப்பிட கொடுத்தோம். சாப்பாடு உள்ளே இறங்க வில்லை. **கூட்டம் முடிந்து Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் மகளுடைய நிலையை சொன்னோம். சகோதரர் மகளுக்காக ஜெபித்துவிட்டு "மகள் சுகமாகிவிட்டாள்" என சொல்லி அனுப்பினார்கள். அன்றிலிருந்து மகள் நன்றாக சாப்பிட ஆரம்பித்து விட்டாள். மூளை வளர்ச்சி குறைபாடும் நீங்கி, பரிபூரண வளர்ச்சி உள்ள மகளாகவும் இருக்கிறாள். கர்த்தர் செய்த இந்த அற்புத செயலுக்காக கர்த்தரை நான் ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- சகோ. டேவிட் பால், மதுரை.**

## 35 வருட தடை நீங்கியது!

என் அம்மாவின் தொண்டையில் சதை வளர்ந்து அதிக கஷ்டங்களை அனுபவித்தார்கள். இனி நான் உயிரோடு இருக்கமாட்டேன் என பயத்தில் கலங்கினார்கள். மதுரையில் நடைபெற்ற கூட்டத்திற்கு எங்கள் அம்மாவை அழைத்து வந்தேன். **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் அம்மாவிற்காக ஜெபித்தார்கள். அத்துடன் அவர்கள் சொன்ன சின்ன ஆலோசனைபடி அம்மா செய்தார்கள். அதன்பின் தொண்டையில் இருந்த பிரச்சனை முற்றிலும் மாறியது. நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள்.**



**எங்கள் அப்பாவின் சொத்து விற்பதில் 35 வருடமாக தடைகள் இருந்தது. கர்த்தர் அந்த தடைகளையும் மாற்றி அந்த சொத்து நல்ல விலைக்கு விற்கவும், எங்களுக்கும் நல்ல பங்கு கிடைக்கவும் ஒத்தாசை செய்தார். ஊழியத்திற்கு எங்கள் நன்றி காணிக்கையைத் தருகிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- திருமதி. பெமினா, மதுரை.**



# அக்டோபர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

**அக்டோபர் 1**
பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார். (லூக். 12:32)

**அக்டோபர் 2**
... அவர் என்னைச் சோதித்த பின் நான் பொன்னாக விளங்குவேன். (யோபு 23:10)

**அக்டோபர் 3**
அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார். (சங். 37:24)

**அக்டோபர் 4**
கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். (யோவான் 12:24)

**அக்டோபர் 5**
... தன் ஜீவனை இரட்சிக்க வகை தேடுகிறவன் அதை இழந்துபோவான்; இழந்து போகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான். (லூக். 17:33)

**அக்டோபர் 6**
நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமல் போவதில்லை... (மாற்கு 9:41)

**அக்டோபர் 7**
இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன். (ஏசா. 48:10)

**அக்டோபர் 8**
மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். (வெளி. 2:10)

**அக்டோபர் 9**
தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும். (1பேதுரு 3:17)

**அக்டோபர் 10**
நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன். (சங். 119:71)

**அக்டோபர் 11**
இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவ காலமாய்க் காத்துக்கொள்ளுவான். (யோவான் 12:25)

**அக்டோபர் 12**
என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். (மத். 10:22)

**அக்டோபர் 13**
நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும். (2 கொரி. 1:16)

**அக்டோபர் 14**
உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள். (லூக். 21:19)

அக்டோபர் 15
சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக. (1பேதுரு 5:10)

நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. (யாக். 5:8)
அக்டோபர் 16

அக்டோபர் 17
துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். (மத். 5:4)

நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. (2 தீமோ. 2:3)
அக்டோபர் 18

அக்டோபர் 19
ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். (1பேதுரு 4:16)

உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக் கொள். (2 தீமோ. 1:14)
அக்டோபர் 20

அக்டோபர் 21
எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். (2 கொரி. 1:4)

ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லு கிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். (மத். 10:28)
அக்டோபர் 22

அக்டோபர் 23
உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன். (லூக். 21:15)

... துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். (1பேதுரு 1:6)
அக்டோபர் 24

அக்டோபர் 25
அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். (2 தீமோ 2:12)

கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. (2 கொரி. 1:15)
அக்டோபர் 26

அக்டோபர் 27
நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். (நீதி. 24:16)

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். (ஏசா. 53:4)
அக்டோபர் 28

அக்டோபர் 29
இயேசு அவர்களை நோக்கி : நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள். (மாற்கு 10:39)

கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். (2 தீமோ. 4:18)
அக்டோபர் 30

அக்டோபர் 31
... ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார். (யோவான் 12:26)

Trichy

# WE ARE HIRING



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Cameraman**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

# மார்ட்டின் லூதர்

## (1483 - 1546)



16-ம் நூற்றாண்டின் மாபெரும் புரட்சி யாளரும் இறையியல் அறிஞரும், திருச்சபையின் சீர்திருத்த வாதியுமான மார்ட்டின் லூத்தரைக் குறித்து இந்த மாதம் பார்ப்போம்.

### பிறப்பும், கல்விப்பருவமும்

இவர் 1483-ஆம் ஆண்டில் ஜெர்மனியில் உள்ள ஐஸ்லிபென் என்ற ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை பெயர் ஹான்ஸ் லூதர். தாயார் பெயர் மார்கரெட்டா. தந்தை ஒரு வணிகராக இருந்தார். 1501-ம் ஆண்டு எர்ஃபர்ட் பல்கலைக் கழகத்தில் நுழைந்தார். 1505-ம் ஆண்டு தனது முதுகலைப் பட்டத்தைப் பெற்றார். 1512-ம் ஆண்டில் டாக்டர் பட்டம் பெற்றார்.

### துறவு வாழ்க்கை

பட்டப்படிப்புகளை முடித்த இவர் துறவறத்தில் நாட்டம் கொண்டார். குருவாக பட்டம் பெற்றார். அன்றைய கால கட்டத்தில் போப்பின் தவறான அணுகுமுறையை கண்டு கொதித்தெழுந்தார். பாவ மன்னிப்பு சீட்டுக்கும் போப்புக்கும் எதிரியானார். **விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு என்பதில் உறுதியாக இருந்தார்.** இவர் மத விரோதி என்று சமயவாதிகளால் வெறுக்கப்பட்டார். மிரட்டப்பட்டார். ஒடுக்கப்பட்டார். விரட்டப்பட்டார். எனினும் அவர் துவண்டு போய்விடவில்லை. முடிவில் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து அதிகாரப் பூர்வமாக நீக்கப் பட்டார்.

### சீர்திருத்த முயற்சிகள்

1513-ம் ஆண்டின் தொடக்கத்தில் பிரசங்கத்திற்கான உரையைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது சங்கீதம் 22-ஐ வாசித்தார். அதில் முதல் வசனம் கிறிஸ்துவானவர் தான் சிலுவையில் அறையப்படும் போது இரக்கத்தை வேண்டிய அவரது இறைஞ்சுதலை வெளிப் படுத்தியது. அவை தனது கருத்துடன் ஒத்துப் போவதை உணர்ந்தார். அதன்பின் பரிசுத்த பவுலினால் எழுதப்பட்ட ரோமர் நிருபத்தில் **"விசுவாசம் மட்டுமே வாழ்வா கிறது"** என்ற வரியை வாசித்தார். இதனால் மத போதனை வாயிலாக அடிமைப்படுத்துவதன் மூலம் ஆவிக்குரிய இரட்சிப்பை பெற முடியாது என்பதை உணர்ந்தார். கர்த்தர் மீது வைக்கிற நம்பிக்கை மட்டுமே ஆவிக்குரிய இரட்சிப்பிற்கு சரியான வழியாகும் என்று உணர்ந்தார். இந்தக் கால கட்டமே லூதரின் வாழ்வில் சீர்திருத்தத்தை கொண்டு வந்த காலமாகும்.

### வேதாகம மொழிபெயர்ப்பு

ஆண்டவரின் பெலத்தினால் அறியாமையை அகற்ற தைரியத்துடன் போராடினார். 1521-ம் ஆண்டு சபையானது லூதரின் எழுத்துக்களை தடை செய்தது. அவரை தேடப்படும் குற்றவாளியாகவும் அறிவித்தது. சில நண்பர்களின் உதவியால் வார்ட்பர்க் கோட்டையில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். அந்த காலத்தில் புதிய ஏற்பாட்டை ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்தார். இதனால் சாமானிய மக்களும் வேதத்தை வாசித்து அறிந்துக்கொண்டனர். திருச்சபை வரலாறு இவரால் திருத்தப்பட்டது. அதன்பின் திருச்சபையில் பல மாற்றங்களை கொண்டு வந்தனர். இவ்வாறு மார்ட்டின் லூத்தரின் முயற்சிக்கும் அவருடைய கடுமையான புரட்சிக்கும் நூற்றாண்டுகள் கடந்து வெற்றி கிடைத்தது.

### இறுதிக்கட்ட வாழ்க்கை

1533 முதல் 1546 வரையான கால கட்டத்தில் மார்ட்டின் லூதர் விட்டர்ன்பர்க் பல்கலைக்கழகத்தில் இறையியல் துறையில் தலைவராக பணியாற்றினார். இந்த காலகட்டத்தில் பலவிதமான உடல் நலக் குறைவு ஏற்பட்டது. மூட்டு வாதம், இதயக்கோளாறு மற்றும் செரிமான சார்ந்த பிரச்சனையினால் அதிகம் கஷ்டப்பட்டார். மார்ட்டின் லூதர் 1546-ம் ஆண்டு பிப்ரவரி 18-ம் நாள் 62 வயதில் தனது சொந்த ஊரான ஐஸ்லிபென்னில் இறந்தார்.



# SJ SAVES TRUST

## மூலமாக மேற்கொள்ளப்பட்ட அறப்பணிகள்

**நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். மாற்கு 10:21**

## சேலம் டியூஷன் சென்டர்

செப்டம்பர் மாதம் சேலம் மாவட்டம் மேட்டுப்பட்டி காலனி, ஏரிக்காடு, கருமாபுரம், வாழப்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள 300 ஏழை குழந்தைகளுக்கு நமது **S.J.Saves Trust** சார்பாக இலவச கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது. பிள்ளைகள் அனைவரும் காலாண்டு தேர்வுகளை நல்லமுறையில் எழுத அவர்களுக்கு தேவையான பேனா, பென்சில், **Exam pad, Exam sheet** மற்றும் அனைத்து எழுது பொருட்களையும் ஸ்தாபகர் ஐயா அவர்கள் இலவசமாக வழங்கினார்கள். பிள்ளைகள் அந்த பொருட்களை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டனர். அத்துடன் அவர்களுக்கு சுவையான பிரியாணி, இனிப்பு வகைகளை **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் கொடுத்து மகிழ்ந்தார்கள்.

**Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் பிள்ளைகள் நன்றாக படிக்க, தேர்வுகளை நன்கு எழுதி அதிக மதிப்பெண்கள் எடுக்க தேவையான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கூறி அவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

குடும்பத்தின் ஏழ்மையான சூழல் நிமித்தம் கஷ்டப்படுகிற பிள்ளைகளுக்கும், பெற்றோரால் சரியாக கவனிக்க முடியாத சூழலில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கும் இந்த உதவிகள் செய்யப்பட்டது.

## பங்காளர்களின் பங்கு

இந்த பணிக்கு உதவி செய்கிற ஒவ்வொரு பங்காளர்களையும் கர்த்தர் தாமே நிறைவாக ஆசீர்வதிப்பார். உங்களுக்கு என்னுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன். தொடர்ந்து தாங்குங்கள். டியூஷன் சென்டருக்கு வருகிற பிள்ளைகள் அனைவருக்கும் தினந்தோறும் இரவு உணவு கொடுத்து வருகிறோம். **மாதந்தோறும் ஒரு பிள்ளைக்கு ஆகும் செலவு Rs.1000/- ஆகும்.**

ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

# செகந்திராபாத்தில்
# அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

**நேரம்**
காலை 9.00 மணி
முதல்
மதியம் 1.30 மணி
வரை

**25 அக்டோபர் புதன்கிழமை**

இடம் : YMCA Cellar AC Hall,
(backside of the main building)
S.P. ரோடு, யசோதா மருத்துவமனை எதிரில்,
மணிக்கூண்டு அருகில், செகந்திராபாத்.

**செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா**
**Dr. ஜேன் ஜாஷ்வா**

ஏரிக்காடு, கருமாபுரம், மேட்டுப்பட்டி காலனி, எம்பெருமாபாளையம், அக்ரஹாரம் ஆகிய ஊர்களில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களுக்கு S.J.Saves Trust மூலம் உதவிகள் செய்யப்பட்டது.













Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் படிப்பில் சிறந்து விளங்கிய மாணவ மாணவிகளுக்கு அழகிய watch–ஐ அன்பளிப்பாக வழங்கினார்கள்



# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நமது S.J.S.T மருத்துவமனை மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. **நமது மருத்துவமனையை சுற்றி அநேக கிராமங்கள் இருக்கிறது. அந்த கிராமங்களிலிருந்து வருகிற மக்கள் மற்றும் அநேக வயதானவர்கள் நமது மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

**குறிப்பாக காய்ச்சல், வயிற்று போக்கு, சிறுநீரகப் பாதை நோய் தொற்று போன்ற அநேக தொற்று நோய்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகிறது. தற்பொழுது அநேக சாலை விபத்துக்கள் நடப்பதால் விபத்திற்கான சிகிச்சையும் இங்கு அதிகமாக அளிக்கப்படுகிறது.**

சராசரியாக ஒரு வருடத்திற்கு சுமார் பன்னிரெண்டாயிரம் முதல் பதினைந்தாயிரம் நோயாளிகள் வரை வெளி நோயாளியாகவும் சிகிச்சை பெற்று பயன் அடைகின்றனர். தற்பொழுது 12 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. I.C.Unit, Emergency ward, Digital X-Ray, Ultra Scan வசதிகளும் உள்ளது.

அனைத்து விதமான இரத்தப்பரிசோதனைக்கும் Computer Lab (Quality Control) உள்ளது. மிக குறைந்த செலவில் தரமான மருத்துவம் நமது மருத்துவமனையில் அளிக்கப்படுகிறது. வாசகர்களாகிய நீங்களும் திருச்சியை சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்பீர்களானால் உங்கள் மருத்துவ சிகிச்சைக்கு இங்கே அணுகலாம்.







# உலகச் செய்திகள்




✦ கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், நழுவவிட்ட வாய்ப்புகள் போன்றவற்றை குறித்து எந்நேரமும் எண்ணி எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களை நாம் பார்க்கலாம். அவ்வாறு கவலைப்படுவதால் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. நாம் கவலைப்படுவதால் கவலைகள் தீருவதில்லை மாறாக மனதின் ஆற்றல் குறைவதோடு, உற்சாகமும் நம்பிக்கையும் தளர்ந்துபோகும்.

✦ உடைந்த சிற்பத்திற்கு ஒப்பாரி வைக்காமல் புதிய சிற்பத்தை இன்னும் சிறப்பாக அழகாக செதுக்க தொடங்குவதே வாழ்க்கையை நம்பிக்கை உடையதாக மாற்றும். பிரச்சனை என்றவுடன் ஏற்படும் பயத்தை முதலில் அகற்றி அதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு எப்படி வெற்றியாக மாற்றிக்கொள்வது என்று சிந்தித்து அதற்கான செயலில் இறங்கவேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் சிரியாவை சேர்ந்த ஓட்டப்பந்தய வீராங்கனை டிமா அக்தா.

✦ சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்பு சிரியாவில் போர் ஆரம்பித்தது. குண்டுகள் போடப்பட்டன. அதில் டிமாவின் வீட்டிற்குள்ளும் குண்டுகள் பாய்ந்து சென்றன. இதில் டிமா பலத்த காயமடைந்தார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பலனால் டிமா உயிர் பிழைத்தார். ஆனால் அவருடைய ஒரு கால் இழக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. கால் இழந்த துயரம் அவரை ஆக்கிரமித்தாலும் உயிர் பிழைத்திருக்கிறேன் என்கிற எண்ணம் மட்டும் அவரை வலிமையானவளாக மாற்றியது. நிலம், கடல், வான்வழியாகப் போரின் பயங்கரத்திலிருந்து தப்பி ஓடிய ஆயிரக்கணக்கான சிரியர்களைப் போலவே டிமாவின் குடும்பமும் லெபனானில் தஞ்சம் அடைந்தது.

✦ எல்லாப் பெண்களையும் போலவே டிமாவிற்கும் எதிர்கால லட்சியம் இருந்தது. ஒரு மாற்றுத்திறனாளியாக இனி என்ன செய்யப்போகிறேன் என்று யோசித்தார். வேலையோ கிடைக்கவில்லை. அவரை பார்ப்பவர்கள் எல்லாம் நீ இப்படி இருப்பதற்குப் பதில் உயிரிழந்திருக்கலாம் என்றார்கள். டிமா மனம் தளரவில்லை.


✦ இந்த உலகத்தில் வாழ வேண்டும். வாழ்ந்தால் மட்டும் போதாது சாதிக்க வேண்டும் என்ற வைராக்கியம் அவருடைய மனதில் ஆழமாக பதிந்தது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்துக்குச் சென்று குடியேறினார். அங்கு டிமாவுக்கு செயற்கைக் கால் பொருத்தப்பட்டது. மீண்டும் ஓட முடியும் என்கிற நம்பிக்கை வந்தது. செயற்கை காலுடன் ஓட்டப் பந்தயத்திற்கான பயிற்சிகள் எல்லாம் எடுத்துக் கொண்டார். தீவிர பயிற்சியின் பலனால் 2024ஆம் ஆண்டு பாராலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்றார் டிமா.

✦ அதுமட்டுமல்ல, டிமா தன்னை ஒரு சமூக ஆர்வலராக மாற்றிக் கொண்டார். தனக்கு அடைக்கலம் கொடுத்த இங்கிலாந்து நாட்டிற்கு தன்னால் முடிந்த உதவிகளை சமூக அக்கறையுடன் செய்ய முடிவு செய்தார். கோவிட் தொற்றின் போது. அகதிகள் முகாம்களில் தடுப்பூசித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 70000 பவுண்டுகளுக்கு மேல் நிதி திரட்டினார். இவரை பாராட்டும் விதமாக பிரிட்டன் அரசு மாற்றுத்திறனாளிகள் கால்பந்து அணியான லயன்ஹார்ட்சில் உறுப்பினராக சேர்த்து அங்கீகரிக்கப்பட்டார். மேலும் பிபிசி தேர்ந்தெடுக்கப்பட்ட 100 சிறந்த பெண்களில் டிமாவும் இடம் பெற்றுள்ளார்.

✦ உடல் குறைபாடுடன் அகதியாக மற்றொரு நாட்டுக்கு சென்று மன தைரியத்துடன் போராடி, விளையாட்டு வீராங்கனையாக, சமூக ஆர்வலராக சாதித்துக்கொண்டிருக்கும் டிமாவின் வாழ்க்கை இன்றைய பெண்களுக்கு ஒரு உன்னத பாடமாகும். டிமா அக்தாவைப் போல மன தைரியத்துடன் செயல்படுங்கள் வெற்றியை வசப்படுத்திக்கொள்ளுங்கள்.

# அப்போஸ்தல தீர்க்கதரிசன வல்லமை முகாம்

## POWER CONFERENCE



அக்டோபர்
**23, 24**
திங்கள், செவ்வாய்

இடம் : YMCA Cellar AC Hall,
(backside of the main building)
S.P. ரோடு,
யசோதா மருத்துவமனை எதிரில்,
மணிக்கூண்டு அருகில்,
செகந்திராபாத்.

நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

## செய்தி: Dr. ஆனந்த ஸ்திரா

கீழ்க்கண்ட தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள். பயிற்சி கட்டணம் வங்கி மூலமாக செலுத்தலாம் அல்லது நேரில் வரும் பொழுது செலுத்தலாம்.

**For Contact : 99445 36343 & 94888 45627**

# தஞ்சாவூரில் அற்புதத்தின் மாலை கூட்டம்

அக்டோபர் 15
ஞாயிற்றுக்கிழமை

இடம் : சுந்தர் மஹால்
காவேரி நகர், புதுக்கோட்டை ரோடு,
தஞ்சாவூர் - 5

நேரம்: மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரை



## தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

**தொடர்புக்கு : 94888 45627**

**Telugu Whats App No: 91770 87860**

**Tamil Whats App No: 95975 55066**



# தாம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்!

## என் மகனின் வாழ்வில் நடந்த அதிசயங்கள்!



என் பெயர் சாராம்மா. எனக்கு ஒரே ஒரு மகன் உண்டு. அவனுடைய படிப்பிற்காக Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். பாஸ்டர் மகனுடைய படிப்பிற்காக, நல்ல எதிர்காலத்திற்காக ஜெபித்தார்கள். தேவ கிருபையால் பாண்டிச்சேரில் மகனுக்கு B.A. English படிக்க இடம் கிடைத்தது. அதுவும் free ஆக படிக்க கர்த்தர் உதவி செய்தார்.

**படித்து முடித்து நல்ல கம்பெனியில் 40 ஆயிரம் சம்பளத்தில் மகனுக்கு வேலையும் கிடைத்தது. மகனுக்கு திருமணம் முடிந்து 2 வருடங்களாக குழந்தை இல்லை. தற்பொழுது என் மருமகள் கர்ப்பிணியாக இருக்கிறாள். இதுவரை கர்த்தர் எங்கள் குடும்பத்திற்கு செய்த அனைத்து நன்மைகளுக்காகவும் கர்த்தரை துதிக்கிறேன். எங்களை நேசித்து ஜெபிக்கிற பாஸ்டர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறேன்.**

**- திருமதி. சாரம்மா, சென்னை.**

## தேவ செய்தியின் மூலம் கர்த்தர் என்னோடு பேசினார்!



என் பெயர் ராஜேஷ்வரி. என் அக்கா அன்பரின் ஊழிய பங்காளர். அன்பரின் ஊழிய பத்திரிக்கையை நான் வாசித்திருக்கிறேன். கூட்டங்களுக்கு இதுவரை வந்தது இல்லை. இன்றைய நாள் கூட்டத்திற்கு வருவதற்கான ஒரு எண்ணமும் எனக்கு இல்லை. ஆனால் **கர்த்தர் தாமே இந்த கூட்டத்திற்கு என்னை அழைத்து வந்திருக்கிறார். கூட்டத்தில் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் வழங்கிய தேவசெய்தி எனக்கு ஏற்றவிதமாகவும், பிரயோஜனமாகவும், ஆசீர்வாதமாகவும் இருந்தது. கர்த்தர் செய்தியின் மூலமாய் என்னோடு பேசியதை நன்றாக உணர்ந்தேன். தேவனுக்கே மகிமை!**

**- திருமதி. ராஜேஷ்வரி, பல்லாவரம்.**

## கழுத்து வலியிருந்து அற்புத சுகம் கிடைத்தது!



என் பெயர் விக்டர். எனக்கு முதுகிலும் கழுத்தின் பின்புறமும் மிகவும் பயங்கரமான வலி இருந்தது. கழுத்தைத் திருப்பினால் மயக்கம் வரும். நடப்பதற்கும் கஷ்டமாக இருக்கும். அதனால் வெளியில் எங்கும் தனியாக செல்வதற்கு மிகவும் தயங்குவேன்.

கடந்த நாட்களில் Rev.Dr.A.ஜாஷ்வா **அவர்கள் என்னை சந்திக்க வந்திருந்தார்கள். அப்பொழுது என் முதுகில் கை வைத்து பாரத்துடன் ஜெபித்தார்கள். மறுநாள் காலை எழுந்தப்பொழுது எனக்கு முதுகிலும், கழுத்திலும் எந்த வலியும் இல்லை. உடனே நடைப்பயிற்சியும் மேற்கொண்டேன். நல்ல சுகத்துடன் இருக்கிறேன். அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை மனதாரதுதிக்கிறேன். ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- சகோ. விக்டர், சென்னை.**

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

# ஈரோட்டில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

அக்டோபர்
**14**
சனிக்கிழமை

இடம் : C.S.I. பாரீஸ் ஹால்
டெலிபோன் பவன் அருகில்,
பிரப் ரோடு, ஈரோடு.

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி: **Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**



# திருநெல்வேலியில்

# உங்கள் விடுதலையின் நாள்

இடம் : செல்வி மஹால்,
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.



விசேஷித்த ஆலோசனையும் ஜெபமும்

**Rev.Dr.A. ஜாஷ்வா**

கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும்
தனித்தனியே ஜெபம் செய்து ஆலோசனை வழங்கப்படும்!

அக்டோபர்
**24** செவ்வாய் கிழமை
(அரசு விடுமுறை)

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை

# திருச்சியில்

# அற்புத சுகமளிக்கும் குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

இடம் : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

அக்டோபர்
**28** சனிக் கிழமை

நேரம் :
காலை 9.30 மணி
முதல்
மதியம் 2.00 மணி
வரை

தேவ செய்தி

**Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

குடும்பமாய் வாருங்கள்! ஆசீர்வாதமாய் வாழுங்கள்!

தொடர்புக்கு : 94888 45627, 80987 42638, 0431- 2741925

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,